# வித்துவான் வேலன் நினைவலைகள்...

"சாவினை வென்றவன் வேலன் அறிவையோ"

19.07.2003



வித்துவான் க.ந. வேலன் அவர்கள்

# வேலன் வாழ்க்கைக் குறிப்புக்கள்

பெற்றோர் இட்ட பெயர்: இரத்தினவேல்
தாயார்: செல்லாச்சிப்பிள்ளை
தந்தையார் : கதிர்காமர் நல்லதம்பி வன்னியன்
பிறந்தநாள்: 1923, நவம்பர் 6ஆம் நாள்
பிறந்த இடம்: ஊரெழு
உடன் பிறப்புக்கள் : நால்வர்

1. குமாரசாமி நல்லதம்பி
2. சுப்பிரமணியம் நல்லதம்பி
3. மகேசுவரி சின்னத்துரை
4. இராசரத்தினம் பிள்ளை

மனைவி : விசயலக்சுமி இரத்தினவேல்
பிள்ளைகள்: தனியொருமகள் - மாதினி சிறீக்கந்தராசா
பேரப்பிள்ளைகள்: அருணன் சிறீக்கந்தராசா
சாம்பவி சீடி

பெற்ற கல்வித் தகைமைகள் :

1. தமிழ் வித்துவான் (அண்ணாமலைப் பல்கலைக் கழகம்)
2. பி. ஓ. எல் (அண்ணாமலைப் பல்கலைக் கழகம்)
3. சித்தாந்தப் புலவன் (அண்ணாமலைப் பல்கலைக்கழகம்)
4. முனைவர் என்ற கலாநிதிப்பட்டம் (அமரிக்கப் பல்கலைக்கழகம்)
5. கற்பித்த கல்லூரிகள்: மானிப்பாய் இந்துக் கல்லூரி
   பருத்தித்துறை ஆட்லிக் கல்லூரி
   யாழ்ப்பாணம் ஸ்ரான்லி கல்லூரி
   யாழ்ப்பாணம் நாவலர் வித்தியாசாலை

6. விழித்தது: 06.11.1923

7. உறங்கியது: 07.06.2003

## Last Will of Vidvan Velan

Everything is already determined.
There is nothing to fear or worry.
Everything in the past was fine.
All that are happening now are also fine.
Those that are yet to happen also will be fine.

By my failure to control my tongue I have harmed my body. To be able to live after 60 years is a bonus. It is not impossible to live one hundred years.

Many were my wishes and dreams. What a shame that I did not visit even Mullaitheevu, the birth place of my father!

Vigilance, education and bravery are the three routes to success. I find these three in every Englishman. Vigilance means great awareness of the surrounding. Education means clear thinking, and not degrees or diplomas. Through vigilance, education and bravery, Englishman ruled the world. Even after the demise of the Empire, his personality rules the world.
God has generously endowed him with an attractive colour, domineering appearance and pleasing speech.
Really these doctors are Gods and the nurses are angels!

I am not a national of this country. What good have I done to this country? How qualified or deserving am I to get all these facilities free of charge. In my homeland, the Tamil Eelam which will soon dawn, the education system and the health service should be modelled and perfected along the British lines.
My above dream about Tamil Eelam will become a reality if those that hold the administrative reins heed to the advice of the wisemen of Tamil Eelam.

I have planned to write about the great lives which Tamil Eelam produced. My intention is to write about those shining lamps that dispelled darkness and ignorance and brightened the lives of others. My wish is to start from Eelattu Poothan Devanaar of the Sangam age and to cover many others who are still living in our midst. It is my intention to list them, classify them and to view them in the historical perspective.

The theme of these writings should be such as to reveal the condition in which they were born, brought up, how they shaped themselves into glittering examples and how they helped to dispel the darkness and ignorance of the world at large. Each of these books should look like a Chandelier of ten lamps. Those books should be fully illustrated with photographs.

There is a need to write research books on the following topics also:

1) History of Sri Lankan Tamils.
2) Influence of Tamil People in South Sri Lanka.
3) Tamil influence in Maldives.
4) History of Tamils in the United Kingdom.

Donations or allowances should be given to those who do the above research projects from my pension savings. The above books should be published both in the English and the Tamil languages. I have already revealed my above intentions in detail to the Tamil public through news papers in Sri Lanka and London.

My son-in-law will fulfil my above wishes. My dearest student A. Sivapatha Suntharam will support my son-in-law.

It is my desire to write comprehensively on the central theme of each of the 133 chapters of the Thirukkural.

It is also my desire to write a book captioned "The Evening Life of Avatars" and to explain that divine souls like Buddha, Jesus Christ, Prophet Mohammed, Ramakrishnar, Swami Vivekananda, Mahatma Gandhi, Aravindar, Ramanar and Yogaswamy never experienced pain at their death and that death was a pleasure to them.

I also would like to write about Saint. Manickavasagar and Subramanya Bharathi. Lord Murugan who endowed me with more than I deserved, has also stuffed me with more desires than I can cope!

# வேலன் விருப்பாவணம்

முருகா

'எப்பவோ முடிந்த காரியம்

ஒரு பொல்லாப்புமில்லை

நடந்ததெல்லாம் நன்றாகவே நடந்தது;
நடக்கிற தெல்லாம் நன்றாகவே நடக்கிறது;
நடப்பதும் நன்றாகவே நடக்கும்.
நா காக்காமையால் இந்த உடம்பைக் கெடுத்துவிட்டேன்.
60 வயதுக்கு மேலே போனஸ் தான்.
நூறாண்டு வாழ்வது கனவல்ல.
கண்ட கனவுகள் பல.
என் தந்தையின் ஊராகிய முல்லைத்தீவுக்குக் கூட நான் போகவில்லையே! தூங்காமை, கல்வி, துணிவுடமை மூன்றும் முன்னேற வழி; தூங்காமை என்பது விழிப்புணர்வு. இம்மூன்றையும் இந்த வெள்ளையரிடம் காண்கின்றேன். கல்வி என்பது தெளிந்த சிந்தனை, பட்டங்கள் அல்ல. ஆங்கிலேயன் விழிப்புணர்வினாலும் தெளிந்த சிந்தனையாலும் துணிவினாலும் உலகை ஆண்டான். நாடுகள் கையகன்ற இந்நாளிலும் அவனது ஆளுமை, உலகை ஆள்கின்றது. இறைவன் அவன்தோலுக்கொரு கவர்ச்சியான நிறத்தினையும் கம்பீரமான தோற்றத்தையும், கனிவான பேச்சையும் அள்ளி வழங்கியிருக்கிறான். உண்மையில் இந்த மருத்துவர் தெய்வங்கள்; தாதிகள் தேவ மகளிர்; நான் இந்த நாட்டவனல்ல; இந்த நாட்டுக்கு என்ன செய்தேன்? இத்தனை வசதிகளையும் இலவசமாகப் பெற எனக்கென்ன தகுதியிருக்கிறது? பிறக்கப் போகும் எனது தாயகமாகிய தமிழ் ஈழத்தின் வைத்திய சேவையும் கல்வியும், பிரித்தானிய முறையைப் பின்பற்றிச் செம்மைப்படுத்தப்பட வேண்டும். ஈழத்து அறிஞர் வழிகாட்ட, அதிகாரம் பின் செல்லும் போது, இந்தக் கனவு நனவாகும்.

"ஈழத்து ஒளிவிளக்குகள்" என்னும் என் சிந்தனை, ஈழத்துப் பூதன் தேவனாரிலிருந்து இன்று வாழ்ந்துகொண்டிருக்கும், பல் துறை யிலும் இருள்நீக்கி ஒளியேற்றிய விளக்குகளை, வரிசைப்படுத்தி வகைப்படுத்தி, வரலாற்றுப்படுத்துவது நோக்கமாகும். இவர்கள்

ஒவ்வொருவரும் எத்தகைய சூழநிலையில் பிறந்து வளர்ந்து தம்மை ஒளிமயமாக்கி அவ்வளவுடன் அமைந்து விடாது உலகின் இருள் நீக்க ஒளிதந்தனர் என்பதை மையப்பொருளாக அமைத்து எழுதப்படவேண்டும். ஒவ்வொரு நூலும் 10 விளக்குகள் கொண்ட விளக்காக, கொத்துவிளக்காக அமைக்கப்பட வேண்டும். போதிய படங்களால் அலங்கரிக்கப்பட வேண்டும்.

அடுத்தது, ஈழத்தமிழர் வரலாறு,
தென்னிலங்கையில் தமிழினச் செல்வாக்கு,
மாலைதீவில் தமிழ்ப்பரம்பல்,
பிரித்தானியாவில் தமிழர் குடியேற்றம் முதலியன பற்றிய ஆய்வு நூல்கள்.
இவற்றிற்கு அன்பளிப்பாக எனது ஓய்வூதியத்தில் இருந்து பணம் கொடுக்கப்படவேண்டும்.
இந்த நூல்கள் எல்லாம் தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் வெளியிடப்பட வேண்டும். இவைபற்றிய விரிவான செய்திகள் பத்திரிகைகள் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளன.
இவற்றை எனது மருமகன் நன்கு நிறைவேற்றுவார்.அவருக்கு உறுதுணையாக எனது அருமை மாணவன்
திரு அ. சிவபாதசுந்தரம் ஒத்துழைப்பு வழங்குவார்.
திருக்குறளின் ஒவ்வொரு அதிகாரத்தின் மையக் கருத்தையும் விளக்கி எழுத ஆசை. "அவதார புருஷர்களின் அந்திமகாலங்கள்" என்னும் தலைப்பில் புத்தர், யேசு, நபிகள் இராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர், காந்தி, அரவிந்தர், ரமணர், யோகர் முதலான அருளாளர்க்கு, மரண அல்லல் இல்லை, மரண சுகமே இருந்தது என்பதை விளக்க ஆசை.
மணிவாசகர் பற்றியும் எழுத ஆசை. என் தகுதிக்கு மிஞ்சிய வாழ்வு தந்த முருகன், என் தகுதிக்கு மிஞ்சிய ஆசைகளையும் வைத்துவிட்டான்.

வித்துவான் வேலன்

# தமிழ் சாவதில்லை
# நீயும் சாகவில்லை

தமிழ்த்தாயின் மூத்த புதல்வனே!
தமிழ் இனத்தின் மூதறிஞனே!
தமிழ் இலக்கியத்தின் காவலனே!
தமிழ் மாணவர்களின் ஆசானே!
தமிழ் மக்களின் அன்புக்குரியோனே!
சொல்லின் செல்வனே - எங்கள்
செம் மண்ணின் சீமானே!
ஊரெழு பெற்றெடுத்த
உத்தம புத்திரனே!
வேலன் ஐயாவே...!
உறங்குங்கள் - நீங்கள்
அமைதியாய் உறங்குங்கள்!!

உங்கள் ஏக்கங்கள் ஆயிரம்
உங்கள் கனவுகள் ஓராயிரம்!
தமிழின் பிள்ளை நீ
தமிழீழ தேசம் பிரிந்து
மனச் சுமையோடு...
புலம்பெயர்ந்து வாழ்ந்தபோதும்
தணியவில்லை உன் இலக்கியத்தாகம்!
இன்றும் உன் எழுத்துக்கள்
கல்வெட்டாய் உருவாகி
எட்டுத்திக்கும் காட்சியளிக்கிறது.!!

தமிழரசுக் கட்சியின்
தலைமை அமைப்பாளர்களில்
ஒருவன் நீ!
தமிழீழ மக்களின் நெஞ்சங்களில்
நிறைந்த புரட்சி வீரன் நீ!
சுடுகுழல் ஏந்திப் போராடாத காலத்தில்

சுடு சொல்லோடு மேடையெங்கும்
முழக்கம் செய்த மாவீரன் நீ!
அகவை போனபோதும் - உன்
அடங்காத் தமிழ்வீரம் போகவில்லை!!

எங்கள் தமிழினத்தை - இன்றும்
எள்ளி நகையாடி
ஏளனம் செய்வோரை - உன்
எழுதுகோல் கொண்டே
ஏறிமிதித்துவிடும்
என்னருமைத் தமிழ் அறிஞனே....
உறங்குங்கள் - நீங்கள்
நிம்மதியாய் உறங்குங்கள்!,

பிரித்தானிய தேசத்தில் - நான்
புதினங்கள் பார்ப்பதற்கும்
செய்திகள் வாசிப்பதற்கும்
புதினப் பத்திரிகையைத் தேடியபோது
"புதினம்" என்ற விளம்பரப் பத்திரிகையை
விரும்பியும் விரும்பாமலும் படித்துவந்தேன்
உன் உள்ளக்கிடக்கைகளை
உள்ளத்தைத் திறந்து
உள்ளதைச் சொல்கிறேனென
உன் நெஞ்சம் பொங்கிவழிய
"நெஞ்சினிலே...." என
நெஞ்சார எழுதியபோதுதான்
"புதினம்" பத்திரிகையைத்
தேடித் தேடியே வாசிக்கலானேன்!
உன்னால் புதினத்திற்கும்
ஒரு "மவுசு" வந்தது உண்மைதான்!!

ஆண்ட தமிழினத்தை விட்டு
அடியோடு அகன்று போனவர்கள்
இன்று தங்களுக்கும் தமிழ்மண்ணில்
தனி உரிமை வேண்டுமென்று
தன் மானம்விட்டு தரணியெங்கும்
தறிகெட்டு உளறித்திரியும்
தமிழைப் பேசும் சமூகத்திற்கு...
புதினத்தின் "நெஞ்சினிலே"யில்
பதிலடி கொடுத்து
நேருக்கு நேர் நின்று
சந்திக்கத் தயார் என்றபோது
மெய் சிலிர்த்துப் போனேன் ஐயா!
அதில் உனை நான்
இருபது வயது இளைஞனாய்ப்!
பார்த்தேன் ஐயா!!

உன்நெஞ்சத்தில் நிறைந்து கிடக்கும்
உள்ளக் குமுறல்களையும்
உளத்தில் தேங்கிக் கிடக்கும்
தமிழ் இன உணர்வின் தீக்குழம்பையும்
தரணியெங்கும் வாழும் - எம்போன்ற
தமிழ் இளைஞர்களுக்கும், இளைஞிகளுக்கும்
அள்ளி அள்ளித் தருவாயென
ஆவலோடு காத்திருந்தேன்.
காத்திருந்த காலனவனோ - என்
கனவுகளைக் கலைத்துவிட்டான்!
ஆனாலும்.... நீங்கள்
அமைதியாய் உறங்குங்கள் ஐயா!!

நேற்று வரை உனைப்புரியாதவர்கள் - இனி
நேசித்து என்ன பயன்!
வானலையூடாக - சேதிசொல்லி
கவிபாடி என்ன புண்ணியம்!
உண்மையான இலக்கிய வாதிகளை

இவ்வுலகம் புரிந்துகொள்ளாது!
நேற்று மேடைபோட்டுப்
பாராட்டாத இவ்வகிலம்
இன்று மௌன அஞ்சலிக்காய்
மேடைபோட்டுப் பேசி என்ன பயன்!!

தமிழின் விடுதலை
“ தமிழீழத் தாயகம் ” தானென
எங்கள் தேசியத் தலைவன்போல்
உறுதியுடன் சொல்லிவந்த
தமிழீழத் தேசப் பற்றாளனே.....
மலரும் தமிழீழத்தில் ஒருநாள்
உன் நாமமும் ஒலிக்கும்!
அதுவரை.....
உறங்குங்கள் - நீங்கள்
அமைதியாய் உறங்குங்கள்!!
ஓம் சாந்தி ! சாந்தி!!

இப்படிக்கு
பார்கவி



## வித்துவான் வேலனின்

## உள்ளத்தின் உள்ளே நின்ற குருநிலை ஆசிரியர்கள்

1. திரு பண்டிதர் இராசையா (அமரர்)
2. திரு பூவராகம் பிள்ளை (அமரர்)
3. திரு அவ்வை துரைசாமிப்பிள்ளை (அமரர்)
4. திரு ஜிப்பா கிருஷ்ணமூர்த்தி (அமரர்)
5. திரு பொன்னுத்துரை - (அமரர்)

## வித்துவான் வேலனின் உள்ளத்தில் நின்ற கல்லூரி அதிபர்கள்

1. ஒறேற்றர் சுப்பிரமணியம் (அமரர்)
2. கர்மயோகி இரத்தின சபாபதி (அமரர்)
3. கே. பூரணம்பிள்ளை (அமரர்)

## வித்துவான் வேலனின் உள்ளத்தில் நின்ற உடன் ஆசிரியர்கள்

1. திரு சபாநாயகம் (அமரர்)
2. திரு வித்துவான் கார்த்திகேசு (அமரர்)
3. திரு வித்துவான் ஆறுமுகம் (அமரர்)

## வித்துவான் வேலனின் அன்பு மாணவர்கள்

1. திரு அ. சிவபாதசுந்தரம்
2. திரு அருமைநாயகம் (அமரர்)
3. திரு சிவசுந்தரம் (இலங்கை)
4. திரு குமரன் (ஜேர்மணி)
5. திரு கடம்பேஸ்வரன்(யாழ்ப்பாணம்)
6. Dr . உக்கிரப்பெருவழுதி (அமரர்)
7. திருமதி சந்திரா
8. திருமதி பிருந்தா
9. திருமதி ஜெயா அருணகிரிநாதன்
10. திருமதி கங்கா நகுலேஸ்வரன்

## வித்துவான் எழுதியவைகள்

1. The message of Yogaswamy of Sri Lanka
( Kanthalagam Publication Madras)
2. மொழிப்பிரச்சினையா? இன வெறியா
3. இலக்கியத்தில் சில இலட்சியங்கள்
4. ஈழத்து யோகசுவாமிகள் ஏற்றிய ஞான விளக்கு
5. யாழ்ப்பாணத்துச் சமையல்
6. வருக தமிழர் பொற்காலம்
7. ஈழத் தமிழர் யார்?
8. காரைக்கால் அம்மையாரின் வாழ்வும் வாக்கும்
9. கண்ணகி சிந்தாத கண்ணீர்(அச்சில்)
10. எனது காமத்துப் பால் (அச்சில்)
11. எனது போராட்டங்களும் தோல்விகளும் (அச்சில்)
12. தேம்சில் வீசிய தென்றல் (கட்டுரைத் தொகுதி)
13. திருமந்திரம் ஓர் அறிமுகம்

## வித்துவானின் முத்துக்கள் சில

" என் சிறுமையை நான் நன்கு உணர்வேன். ஆனால் என் தகுதிக்கு மேல் கோடி கோடியாக வள்ளல் முருகன் வாரி வழங்கிக் கொண்டே இருக்கிறான். அவற்றுள் ஒன்று சாதாரண ஆசிரியனான எனக்குக் கிடைத்த அசாதாரண மாணவச் செல்வங்கள், அவர்களுக்குக் கற்பித்ததன் மூலம் நான் கற்றவை எத்தனையோ!

(பக்கம் 23 "வருக தமிழர் பொற்காலம")

" ஈழத்தமிழினத்தின் விடுதலை உலகத் தமிழினத்தின் விடுதலையாகும் என்பதை உலகம் விரைந்து காணத்தான் போகிறது" (பக்கம் 177 - "ஈழத்தமிழர் யார்")

" அகதிகளாகிய தமிழர்கள் அலையவும்
அன்னம் தண்ணி இலாதவர் சாகவும்
சகதிகள் சேறுகள் தாண்டி வந்தவர்
தாண்டிக் குளத்திலே செத்து மடியவும்
அகமும் உருகியென் ஆவி கலங்கிட
அரச கவுரவம் யானிதை ஏற்பனோ?
சகமும் உணர்ந்திடும் சான்றோர் உணர்வரால்
சாவினை வென்றவன் வேலன் அறிவையோ?

(பக்கம் 64 - "வருக தமிழர் பொற்காலம்")

8. வழங்குகின்றாய்க்கு உன் அருள் ஆர் அமுதத்தை
வாரிக் கொண்டு
விழுங்குகின்றேன் விக்கினேன் வினையேன் என்
விதி இன்மையால்
தழங்கரும் தேனன்ன தண்ணீர் பருகத்தந்து
உய்யக் கொள்ளாய்
அழுங்குகின்றேன் உடையாய் அடியேன் உன்
அடைக்கலமே.

*(திருவாசகம்)*

9. நோகேயானே தேய்க மாகாலை
பிடி அடி அன்ன சிறு வழி மெழுகித்
தன் அமர் காதலி புன்மேல் வைத்த
இச் சிறு பிண்டம் யாங்கு உண்டான் கொல்!
உலகு புகத் திறந்த வாயில்
பலரோடு உண்டல் மரீஇ யோனே!

*(புறநானூறு 234)*

10. " ஆற்றுதல் " என்பது ஒன்று அலந்தவர்க்கு உதவுதல்
" போற்றுதல் என்பது புணர்ந் தாரைப் பிரியாமை
" பண்பு" எனப்படுவது பாடறிந்து ஒழுகுதல்
"அன்பு எனப்படுவது தன் கிளை செறா அமை
" அறிவு எனப்படுவது பேதையார் சொல் நோன்றல்
"செறிவு" எனப்படுவது கூறியது மறாஅமை
"நிறைவு" எனப்படுவது மறைபிறர் அறியாமை
"முறை" எனப்படுவது கண்ணோடாது உயிர்வவ்வல்
"பொறை" எனப்படுவது போற்றாரைப் பொறுத்தல்.

*( கலித்தொகை)*

11. பண்டம் பெய்கூரை பழகி விழுந்தக்கால்
உண்ட அப் பெண்டிரும் மக்களும் பின் செலார்
கொண்ட விரதமும் ஞானமும் அல்லது
மண்டி அவருடன் வழிநடவாதே!

*(திருமந்திரம் 144)*

12. ஆர்க்கும் இடுமின்
அவர் இவர் என்னன்பின்
பார்த்திருந்து உண்பின்
பழம்பொருள் போற்றன்மின்
வேட்கை உடையீர்
விரைந்து ஒல்லை உண்ணன்மின்
காக்கை கரைந்துண்ணும் காலம் அறிமினே
*(திருமந்திரம் 250)*

13. நல்லார் எனத்தாம் நனி விரும்பிக் கொண்டாரை
அல்லார் எனினும் அடக்கிக் கொளல் வேண்டும்
நெல்லுக்கு உமி உண்டு நீருக்கு நுரை உண்டு
புல்லிதழ் பூவிற்கும் உண்டு
*(நாலடியார்)*

14. வேதம் ஓதிலென் வேள்விகள் செய்கில் என்
நீதி நூல் பல நித்தம் பயிற்றில் என்
ஓதி அங்கமோர் ஆறும் உணரில் என்
ஈசனை உள்கு வார்க்கன்றி இல்லையே
*(அப்பர் தேவாரம்)*

15. நெக்கு நெக்கு நினைபவர் நெஞ்சுளே
புக்கு நிக்கும் பொன்னார் சடைப்புண்ணியன்
பொக்கம் மிக்கவர் பூவும் நீரும் கண்டு
நக்கு நிற்பர் அவர்தமை நாணியே.
*(அப்பர் தேவாரம்)*

16. இனியோ நாம் உய்ந்தோம்
இறைவன் அருள் சேர்ந்தோம்
இனியோர் இடர் இல்லோம் நெஞ்சே - இனியோர்
வினைக்கடலை ஆக்குவிக்கும் மீளாப்பிறவிக்
கனைக் கடலை நீந்தினோம் காண்.
(காரைக்கால் அம்மையார்- அற்புதத் திருவந்தாதி)

17. கல்லாப் பிழையும் கருதாப் பிழையும் கசிந்துருகி
நில்லாப் பிழையும் நினையாப் பிழையும் நின்
ஐந்தெழுத்தைச்
சொல்லாப் பிழையும் துதியாப் பிழையும்
தொழாப் பிழையும்
எல்லாப்பிழையும் பொறுத்தருள்வாய்
கச்சியேகம்பனே
*(பட்டினத்தார்)*

18. யாயும் ஞாயும் யார் ஆகியரோ
எந்தையும் நுந்தையும் எம் முறைக்கேளிர்?
யானும் நீயும் எவ்வழி அறிதும்
செம்புலப் பெயல் நீர் போல
அன்புடைநெஞ்சம்
தான் கலந்தனவே
*(குறுந்தொகை)*

19. நானேயோ தவம் செய்தேன் சிவாயநம எனப் பெற்றேன்
தேனாய் இன்னமுதமுமாய்த் தித்திக்கும் சிவபெருமான்
தானே வந்தென துள்ளம் புகுந்து அடியேற்கு அருள்செய்தான்
ஊனாரும் உயிர் வாழ்க்கை ஒறுத்தன்றே வெறுத்திடவே.
*( திருவாசகம்)*

20. இறப்பு எனும் மெய்ம்மையை இம்மை யாவர்க்கும்
மறப்பு எனும் அதனின் மேல் கேடு மற்று உண்டோ
துறப்பு எனும் தெப்பமேதுணை செய்யாவிடின்
பிறப்பு எனும் பெருங்கடல்பிழைக்கல் ஆகுமோ?
*(கம்பராமாயணம்)*

21. குற்றமில் காட்சிக் குதலைவாய் மைந்தரையும்
பெற்றுக் கொளலாம் பெறலாமோ? கொற்றவனே
கோக்காதலனைக் குல மகளுக்கு என்றுரைத்தாள்
நோக்கால் மழைபொழியா நொந்து-
*(நளவெண்பா)*

22. கலம் செய் கோவே! கலம் செய்கோவே!
அச்சுடைச் சாகாட்டு ஆரம் பொருந்திய
சிறு வெண் பல்லி போலத் தன்னொடு
சுரம்பல வந்த எமக்கும் அருளி!
வியன்மலர் அகன் பொழில் ஈமத்து ஆழி
அகலிது ஆக வனைமோ!
நனந்தலை மூதூர்க் கலம் செய்கோவே.
*(புறநானூறு- 256)*

23. நின் நயந்து உறைநர்க்கும் நீ நயந்து உறைநர்க்கும்
பன் மாண் கற்பின் கிளை முதலோர்க்கும்
கடும்பின் கடும்பசி தீர யாழநின்
நெடுங் குறியெதிர்ப்பை நல்கியோர்க்கும்
இன்னோர்க்கு என்னாது என்னோடும் சூழாது
வல்லாங்கு வாழ்தும் என்னாது நீயும்
எல்லோர்க்கும் கொடுமதி மனைகிழவோயே!
பழந்தூங்கு முதிரத்துக் கிழவன்
திருந்துவேல் குமணன் நல்கிய வளனே!
*(புறநானூறு 163)*

24. பதி இழந்தனம் பாலனை இழந்தனம்
படைத்தநம்
நிதி இழந்தனம் இனிநமக்கு உளதென
நினைக்கும்
கதி இழக்கினும் கட்டுரை இழக்கிலேன்
என்றார்
மதி இழந்துதன் வாய் இழந்து அருந்தவன்
மறைந்தான்
(அரிச்சந்திரபுராணம்)

## நல்ல மழை பெய்யாதோ

25. நல்ல மழை பெய்யாதோ நாடு சிறவாதோ
எல்லவரும் இன்புற்று வாழாரோ - நல்லூரான்
ஆசானாய் வந்தே யடியேனை யாண்டுகொண்டான்
பேசாவனு பூதியென் பேறு

26. நற்சிந் தனையென்னும் நல்லமுதம் உண்டக்கால்
கற்கும் நெறியுண்டோ காசினியில் - விற்றூண்
ஒன்றுமே யில்லாத உன்மத்தன் யோகனுக்(கு)
என்றுமின்ப மென்றே யிசை

27. பாட வறியான் பலகலையுந் தானறியான்
தேட வறியான் சிவயோகன் - நாடறியப்
பிச்சைச்சோ றுண்டு பிறவிப் பிணிதீர்ந்தான்
அச்சமிவற் கில்லையறி

28. இச்சையில் லோரே யிடும்பைக் கிடும்பையை
நிச்சய மாய்ப்படுப்பர் நீயறியாய் - அச்சமற்று
வாழ்சிவ யோகனைமுன் வந்துவலிந் தாண்டுகொண்டான்
கேள்கிளைகள் நீங்கக் கிளர்ந்து

29. எழுவாய் பயனிலைகள் இல்லாமற் பாடித்
தொழுவான் சிவயோகன் சொல்லின் - அழுவான்
விழுவான் விதிர்விதிர்ப்பான் ஆரறிவார் என்று
தழுவுவான் தன்னையுன்னித் தான்

*( யாழ்ப்பாணத்துச் சிவயோகசுவாமிகள்)*

# சத்தியமுணர்ந்த பேர்க்குச்
# சாவென்ற ஒன்றுமுண்டோ!

தமிழ்கூறும் நல்லுலகெங்கும் நன்கறியப்பட்டவரான தமிழறிஞர் க. ந. வேலன் (கதிர்காமர் நல்லதம்பி இரத்தினவேல்) அவர்கள் சிறிது காலச் சுகவீனத்தின் பின்னர், கடந்த மாதம் 7ம் திகதி இங்கிலாந்திலுள்ள வைத்தியசாலையொன்றில் இயற்கை எய்தினார் என்ற தகவலை அன்பரும் நண்பருமான இராமநாதன் அவர்கள் அறியத் தந்தவேளை ஆழ்ந்த அதிர்ச்சிக்குள்ளானேன்.

அடுத்த சில மணித்துளிகளில் இலண்டனின் ஐ. பி. சி வானொலி நிலையத்திலிருந்து தம்பி எஸ். கே ராஜன் தொடர்புற்ற வேளை, வானலை ஊடாக அந்தப் பெரியவருக்கு அஞ்சலி செய்யும் சந்தர்ப்பம் கிடைத்தது. இறுதி நிகழ்ச்சிகளில் நேரில் கலந்து கொள்ள முடியாத போதிலும், ஐ. பி. சி வானொலி எனது துயரினைப் பங்கிட ஒரு களம் தந்தது.

எழுத்தாலும், பேச்சாலும் உயிரோட்டமாக வாழ்ந்த இப்பெரியாரின் ஈமச் சடங்குகள் ஜூன் 14ஆம் திகதியன்று இங்கிலாந்தில் நடை- பெற்ற வேளையில் பெருந்தொகை நண்பர்கள் அன்பர்கள் கலந்து தங்கள் இறுதி மரியாதையை அவருக்குச் செலுத்திய போது, கனடிய தமிழ் எழுத்தாளர் இணையமும் ரொறன்ரோவில் அவருக்கு அஞ்சலி செலுத்தித் துயரினில் பங்கு கொண்டது.

தொழிலால் ஆசிரியராய், மூச்சால் இலக்கியச் சுடராய், செயலால் அரசியல்வாதியாய், உணர்ச்சியால் ஆத்மீகனாய் உயர்ந்த வேலன் ஐயா அவர்கள் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் வித்துவான் பட்டமும், B. O.L பட்டமும் பெற்றவர். இலக்கிய நயத்தை அரசியல் மேடைகளில் புகுத்தி அதனை அலங்கரித்துப் புளகாங்கிதமடைந்த இவர் ஆன்றவிந்தடங்கிய அறிவாளி; கவியுளம் கொண்ட இலக்கியம் உவக்கும் கருத்தாளி; புகழ் பூத்த பேச்சாளர்: இலங்கைக் கம்பன் கழகத்தின் தூண்களில் ஒருவராக நின்று கம்பன் புகழைப் பட்டிதொட்டியெங்கும் பரவச் செய்தவர்.

இளவயதிலிருந்து முற்போக்குக் கொள்கையில் ஊறித் திளைத்திருந்த க. ந. வேலன் அவர்கள் நல்லதொரு தமிழினப் பற்றாளர். மானிப்பாய் இந்துக் கல்லூரி, யாழ் ஸ்ரான்லிக்கல்லூரி, காட்லிக்கல்லூரி, ஆகியன இவர் கல்விப் பணியைச் சொல்ல நிமிர்ந்து நிற்பவை.

இங்கிலாந்தில் சிவதொண்டன் நிலையத்தை உருவாக்கியவரும் இவரே. ஈழத்தில் வாழ்ந்த காலத்தில் இவரால் எழுதி வெளியிடப்பட்ட "சிவயோக சுவாமிகளின்"ஞானவிளக்கு" நூல் தத்துவமான படையல். மொழிப்பிரச்சனையா, இனவெறியா, காரைக்கால் அம்மையாரின் வாழ்வும் வாக்கும், யாழ்ப்பாணத்துச் சமையல், வருக! தமிழர் பொற்காலம், ஈழத் தமிழர் யார் என்பவை இவரால் இதுவரை எழுதி வெளியிடப்பட்ட நூல்கள். இவை தமிழர் கலாச்சாரம், பாரம்பரியம், வீர வரலாறு ஆகியவைகளைத் துல்லியமாக எடுத்துக் காட்டி நிற்பவை.

நண்பர் ராஜகோபாலை ஆசிரியராகக் கொண்டு வெளிவரும் லண்டன்" புதினம்" பத்திரிகையில் இறுதிக் காலத்தில் இவரால் எழுதப்பட்டு வந்த கட்டுரைத் தொடரை ஒரு" மாஸ்டர் பீஸ்"எனலாம். தமிழர் எங்கு சென்றாலும் அவர்கள் தமிழராக வாழ வேண்டுமென்பதைச் செயலால் காட்டிய ஐயாவின் மனக்கிடக்கையை இந்தக் கட்டுரைத் தொடர் படமாக்கித் தந்தது.

அகவை எண்பது காண்பதற்கு ஆறு மாதங்கள் இருக்கையில், இறைவன் அழைப்பு வந்துவிட்டது என்று சொல்லி மனதை அமைதிப்படுத்துவதைத் தவிர வேறொன்றும் தெரியவில்லை. சிவயோக சுவாமிகள் சொன்னபடி " எல்லாம் எப்பவோ முடிந்த காரியம்".

நீண்ட காலமாக என்னுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தவர் இவர். 1989மே மாதத்தில் எனது ஒரே பிள்ளையான 19வயது மகன் அகிலன் இந்திய இராணுவக் கைக்கூலிகளால் யாழ்நகரில் படுகொலை செய்யப்பட்டபோது ஆழ்ந்த கவலைக்குள்ளானார்.

புலோலியிலிருந்து என்னில்லம் வந்து மைந்தனின் இறுதி நிகழ்ச்சிகளில் நேரில் பங்குபற்றினார். அத்துடன் நின்று விடவில்லை. இந்தக் கொலையினால் தனது மனது எரிந்து கொண்டிருந்ததை,

" புகழொடு போனான் இந்நாள்!
புயலென உயர்ந்தான் எல்லை"

என்ற தலைப்பில் கவிவழி வரைந்து எனக்கு அனுப்பி அமைதி கொண்டார்.

*கலங்கினேன் கலங்காத கன்னெஞ்சக் கயமை கண்டு*
*காலனா வந்துயிரை உண்டான் தம்பி!*
*நிலந்தன்னில் மனையொடு நீயிருந்த நிட்டை கண்டேன்*
*நினைவற்றேன் நெஞ்சற்றேன் நிலையுமற்றேன்!*
*கலஞ்சேரும் கரையென்று இருந்தாய் நீயும்*
*கடும்புயலால் அது கவிழ்ந்தால் என்ன செய்வாய்?*
*கலங்காதே அவன் எங்கே போகப் போறான்?*
*தத்துவத்தை நீயுணர்ந்து ஆறிக் கொள்ளே!*

*தத்துவம் உணர்ந்தார்கூடத் தாங்கிட முடியாத் துன்பம்*
*தசரதன் என்ன செய்தான், தரித்திலன் ஆவி போனான்*
*தந்தை நீ என்ன செய்வாய்? தாயவள் பொறுக்குமாறோ?*
*புத்தனாம் போதி ஞானி, புகன்றநல் ஞான வார்த்தை*
*புந்தியில் பதியுமாறோ, போதனை என்ன செய்யும்?*
*புலம்பிநீர் உகுந்த கண்ணீர் பொருளற்றுப் போகா துண்மை!*
*புத்திரன் எங்கே போனான்? பொய்யில்லை எங்கு மானான்!*
*புகழொடும் வாழ்ந்தான் சின்னாள் புகழொடும் போனான் இந்நாள்!*
*புழுவென ஊர்ந்தானில்லைப் புயலென*
*உயர்ந்தானெல்லை!*
*சத்தியமுணர்ந்த பேர்க்குச் சாவென்பதொன்று முண்டோ*
*சத்திய முணர்ந்து விட்டுச் சாவினைத் தழுவிக் கொண்ட*
*புத்திரன் போகான் தம்பி, பொறுத்திரு உண்மை காண்பாய்!*

என்ற வரிகள் ஊடாக என்மகன் அகிலன் மறைவுக்கு ஆறுதலும் தேறுதலும் தந்த அறிஞர் பெருமகன் வேலன் ஐயாவின் மறைவுக்கு

ஆறுதல் சொல்ல என்னிடம் வார்த்தைகளில்லை. அவர் சொன்ன அதே வார்த்தைகளை "சத்தியமுணர்ந்த பேர்க்குச் சாவென்பதொன்று முண்டோ? என்ற கேள்வியைக் கேட்டு அவர் தந்த பதிலையே " கலங்காதீர்" அவர் எங்கே போகப் போறார்? என்று மட்டுமே இப்போது எழுத முடிகின்றது!

மரணங்கள் மலிந்த இன்றைய இயந்திர உலகில், அறிஞர் வேலன் அவர்களும் வெறுமனே "காலம் ஆனார்" என்று கூறிவிட முடியாது.

அவர்தம் பன்முகப் பணிகள், முகிழ்ந்த தாய் நிலத்திலும் கிளை பரப்பித் திகழ்ந்த விளை மண்ணிலும் வேர் விட்டு ஈரமாய் நிற்கும் தன்மையன.

திரு எஸ் திருச்செல்வம்
பிரதம ஆசிரியர்
தமிழர் தகவல், கனடா



# சிறந்த ஒரு தமிழ் மனிதன்

பேராசிரியர் சண்முகதாஸ் அவர்களே, வித்வான் வேலன் பால் அன்பு கொண்டிருந்து அதை வெளிக்காட்டும் விதமாக இந்த இரங்கல் கூட்டத்திற்கு வந்திருக்கும் சகோதர சகோதரிகளே!

வித்வான் வேலனை நினைந்து யாழ் மண்ணில் வந்து இரங்கலுரை ஆற்றும் ஒரு சந்தர்ப்பம் என்னைச் சாரும் என்று நான் கனவிலும் எண்ணவில்லை. வித்வானின் மருமகனும் என் நண்பருமான இலண்டனில் வசிக்கும் திரு ஸ்ரீஸ்கந்த ராஜா அவர்களுக்கு இன்னும் என் மனவருத்தத்தைக் கூடத் தெரிவிக்க வில்லை. அதற்கு வசதியும் ஏற்படவில்லை. வித்துவானின் மறைவு பற்றி நான் அறிந்ததே கம்பவாரிதி மூலமாகத் தான். நான் அறிந்தவரையில் ஓரளவு நல்ல சுகதேகியாக இருந்த அவரைக் காலன் கொண்டு போனதற்குக் காரணம் கூட எனக்கு இது வரையில் சரியாகத் தெரியாது. நீரிழிவு வியாதியின் தாக்கம் என்று கேள்வி. ஆனாலும் அவரின் மறைவு குறித்து இரங்கல் கூட்டம் ஒன்று நடத்தப்படுகிறது என்று அறிந்ததும் அக் கூட்டத்தில் பங்குபற்ற உடனே என் சம்மதத்தைத் தெரிவித்தேன். காரணம் அவர் ஒரு நல்ல மனிதர்.

அவர் பற்றி நான் படிப்படியாக அறிந்தவை பற்றி வரிசைப்படுத்திக் கூறலாம் என்று நினைக்கிறேன்.

உணர்ச்சி மிக்க தமிழன் வித்வான் வேலன் என்று மட்டுந்தான் என் கல்லூரி நாட்களில் அவர் பற்றி நான் அறிந்து வைத்திருந்தேன்.

அதன் பின் படிப்படியாக இயல், இசைநாடகத் துறைகளில் அவருக்கிருந்த ஆற்றல் பற்றியும் ஆர்வம் பற்றியும் அறிந்து கொண்டேன். சிறந்த பேச்சாளர், இனிமையாகப் பாடும் பாங்குடையவர், நாடகத் துறையில் நனிநாட்டங் கொண்டவர் என்று அப்பொழுது தெரிந்து கொண்டேன்.

அதன் பின் அவர் மகளை, நண்பர் சட்டத்தரணி ஸ்ரீஸ்கந்தராஜா

அவர்கள் மணந்ததாக அறிந்து கொண்டேன்.

சுமார் 8 - 10 வருடங்களுக்கு முன் அவர் கொழும்பு வந்து கொழும்பு கம்பன் கழக நிகழ்ச்சிகளில் கலந்து கொண்ட போது தான் இன்சுவை ததும்பும் பேச்சாளர், உணர்ச்சி மிகு அறிவாளர், இசையில் மயங்கும் உணர்வாளர், இனிக்கப் பேசிப்பழகும் இன்முகப் பண்பாளர் என்று அவர்பற்றித் தெரிந்து கொண்டேன்; நேரடியாகவே தெரிந்து கொண்டேன்.

வாழ்க்கையைப் பார்த்துச் சிரிக்கக் கூடியவர்கள் ஒரு சிலரே இருக்கிறார்கள். எனக்குத் தெரிந்தவர்களுள் வித்வான் வேலனும் ஒருவர்.

தம்மை ஏத்தி மற்றையோரைத் தாழ்த்திப் பேசிக்கொள்ளும் சராசரி மனிதர்களின் வாழ்க்கையானது, தம்மை எதிர்த்துப் போராடும் எதிரியுடன் எந்நேரமும் ஏட்டிக்குப் போட்டியாய் நிற்கிறோம் என்ற ஒரு மனோநிலையையே சதா கொண்டிருக்கும். தம்மை மற்றவர் விஞ்சிவிட இடம் அளிக்கக் கூடாது என்ற எண்ணப் பாங்கிலேயே அவர்கள் காலம் கடத்துவார்கள். ஆனால் தன்னையும் வாழ்க்கையையும் ஒரே நேர்க் கோட்டில் வைத்து அக்கோட்டிற்கு வெளியில் இருந்து மேற்பார்வை பார்க்கக் கூடியவர்கள் தமது பிழைகளைக் கண்டு தாமே பரிகசிப்பார்கள். மற்றவர் தவறுகளைக் கண்டும் நகைப்பார்கள். வாழ்க்கையின் விசித்திரங்களையும் முரண்பாடுகளையும் கண்டு வாய்விட்டுச் சிரிப்பார்கள். இவ்வாறு நகைச்சுவையுடன் வாழ்க்கையைப் பார்த்துப் பரிகசிப்பவர்கள் உலகைக் கண்டு பயப்படமாட்டார்கள். உண்மைக்கு மதிப்புக் கொடுப்பார்கள். தம்மைப் பற்றியே சதா சிந்திக்கும் உன்மத்தர்களை மதிக்கமாட்டார்கள். அந்த விதத்தில் வித்வான் வேலனைச் சிறந்த தமிழறிஞர் என்று பாராட்டுவதிலும் பார்க்க அவரை ஒரு சிறந்த தமிழ் மனிதர் என்று பாராட்டுவதைத் தான் பெருமையாகக் கருதுகிறேன்.

வித்வான் வேலன் கூடச் சிறந்த மனிதர்களைத்தான் மதித்து வந்தார். அவர் தமது அந்தக் குணாதிசயம் பற்றி மறைமுகமாக "

”ஞானவிளக்கு” என்ற அவர் நூலில் கூறியுள்ளார். “ அர்த்தமற்ற கட்டுப்பாடுகளையும் போலித்தனங்களையும் என் இரத்தத்தில் இருந்தே களைந்து விட்ட என் இயல்பு” என்று தம்மைப் பற்றிக் கூறும்போது, சமுதாயப் போற்றலுக்காகத் தமது வாழ்க்கையை மாற்றி அமைத்து ஒரு போலி வாழ்க்கை வாழ்ந்து வரும் மனிதர்களை அவர் மதிக்கவில்லை என்று தெரியவருகிறது.

மதிக்க வேண்டியவர்களை மதித்து, வேடதாரிகளைப் புறக்கணித்த அவர், சில சமயங்களில் பலரின் கண்டனத்திற்கும் விமர்சனத்திற்கும் ஆளாகினார். வித்வான் வேலன் புறநானுற்றுப் புலவர்கள் போல் கூழுக்கும் கஞ்சிக்கும் பாடக் கூடியவர் என்று பரிகசிப்பார்கள் அவர்கள். அதன் அடிப்படைக் காரணம் அவர் அரசியலில் ஒரு கட்சி சார்பில் நின்று ஒரு பக்கச் சார்புடன் நடந்து கொள்ளாமையே. இன்று ஒரு கட்சியாளருக்குச் சாதகமாகப் பேசினால் அவரின் கட்சிக்கு நேர் எதிர்க் கட்சி சார்பில் தேர்தலில் நிற்கும் இன்னொருவர் சார்பிலும் பேசுவதற்குத் தயங்கமாட்டாராம். அது என்ன நியாயம் என்று கேட்கத் தலைப்பட்டார்கள் பலர்.

வித்வானின் குணத்தை அறிந்தவர்கள் இதைத் தவறாகக் கொள்ளமாட்டார்கள். காரணம் வித்வான் வேலன் தனிமனிதப் பண்புகளையே பாராட்டிப் போற்றியவர்.
“ நல்லார் ஒருவர் உளரேல் அவர்பொருட்டு எல்லோர்க்கும் பெய்யும் மழை”
என்றவாறு நல்லவர்கள் எந்தக் கட்சியில் இருந்தால் என்ன, அவரை வரவேற்று ஊக்குவித்து உற்சாகப்படுத்த வேண்டும் என்று தன் நா நலத்தை அவர்களுக்காகப் பாவித்தார்.

கட்சிகள், அதுவும் அரசியற் கட்சிகள், மனித நேயத்திற்கும் மக்கள் நலனுக்கும் புறம்பான விதத்தில் கூட சில சமயங்களில் காரியம் ஆற்றுவன. இன்று ஒரு கட்சியில் இருப்பவன் நாளை வேறு கட்சியில் சேரவேண்டிய நிலை ஏற்படலாம். உண்மைக்கும் மனச் சாட்சிக்கும் கட்டுப்பட்ட ஒருவர் அதன் பொருட்டுக் கட்சி மாறவேண்டிய நிர்ப்பந்தங்கள் பல ஏற்படலாம்.

ஆகவேதான் வித்வான் வேலன் கட்சிகளை மதிக்கவில்லை.

தனிமனிதர்களின் சக்தியை எடைபோட்டு அவர்கள் முன்னேறுவதற்கான ஒத்துழைப்புக்களையும் நல்கிவந்தார் என்று நம்புகிறேன்.

கட்சிகளினால் இந்நாட்டில் தமிழர்களுக்கு ஏற்பட்டுள்ள அனர்த்தங்கள் கொஞ்ச நஞ்சமல்ல. ஒரு கட்சி தமிழர்களின் பிரச்சனைகளைத் தீர்க்க முன் வந்தால், மற்றவை அதை எதிர்ப்பன. மற்றவை பதவிக்கு வந்து அவர்கள் ஏதாவது உருப்படியாகச் செய்ய எண்ணினால் முன்பு நல்லது செய்து வந்த கட்சியே அதற்கு முட்டுக்கட்டையாக மாறிவிடும்.

ஆக மொத்தத்தில் கட்சிகள் இடத்துக்கிடம், நேரத்திற்கு நேரம், காலத்திற்குக் காலம் வெவ்வேறு பல்லவிகளைப் பாடும் வல்லமை பெற்றன. அப்பல்லவிகளை அபசுரமாகக் கணிப்பவர்கள் தொடர்ந்து அக்கட்சிகளில் அங்கம் வகிக்கக் கஷ்டப்படுவார்கள். வித்வான் வேலன் கட்சிகளிலும் பார்க்க, நல்லவர்களாகத் தான் மதித்தவர்களைக் கட்சி பேதம் இன்றி ஆதரவு நல்கி ஊக்கப்படுத்தினார்.

வித்வான் வேலனின் இன்னொரு குணாதிசயமும் என்னைக் கவர்ந்தது. மக்களுள் பெரியவர் சின்னவர் என்ற பாகுபாடு காட்டாதவர் அவர். தகைமை, தன்மை, தகுதி எங்குள்ளதோ அதனை அடையாளம் கண்டு வரவேற்பதற்குத் தயங்க மாட்டார். அதேபோல் யார் யாருக்கு உதவிகள் தேவையோ, அவர்கள் எத்தகையவர்களாக இருந்தாலும் தம்மால் ஆன உதவிகளை நல்குவதில் பின்னிற்கமாட்டார். உதாரணமாக மானிப்பாய் இந்துக் கல்லூரியின் கல்லூரிக் கீதம் இவரால் இயற்றப்பட்டதாகக் கூறுவார்கள். அப்படி ஒரு பெரிய கைங்காரியத்தைச் செய்த அவரிடம் அவ்வூரிலுள்ள இந்து சமய விருத்திச் சங்கத்தால் நடாத்தப்பட்ட பாலர் பாடசாலைக்கு ஒரு கல்லூரி கீதம் இயற்றினால் என்ன என்று ஒரு ஆசிரியை தயங்கித் தயங்கிக் கேட்டிருக்கிறார். அதை உடனே இயற்றியது மட்டுமல்ல, அதற்கு இசை அமைத்து, ஒலி நாடாவில் ஒலிப்பதிவு செய்து அடுத்த நாளே ஆசிரியையிடம் கொடுத்தும் விட்டார்.

இந்திய இராணுவ வரவினால் இடம்மாறிச் சென்ற வித்வான் திரும்பி வந்ததும் சின்னவர் பெரியவர் என்று கருதாது யாவரையுஞ் சென்று, கண்டு குசலம் விசாரித்து வந்தாராம்.

அவரைப் பற்றி மானிப்பாய் இந்துக் கல்லூரிப் பவளவிழா மலரில் பின்வருமாறு ஆங்கிலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது:-

Vidwan Velan is a rare personality who added lustre to our staff room. He is a great Tamil scholar and also a silver tongued orator who during his speeches kept the whole school in spell bound silence. Being a musician he sings beautifully. These assets made him a very successful teacher of Tamil and Religion"

அவரின் பேசும் style பற்றி ஒரு வார்த்தை. நேற்றைய தினம் கம்பவாரிதி அவர்கள் வட்டுக் கோட்டையில் பேசியபோது நாங்கள் தமிழர்களாகப் பிறந்துவிட்டோம், இந்துக்களாகப் பிறந்துவிட்டோம் என்று மார்தட்டுங்கள் என்று கூறாது உங்கள் கொலர்களை உயர்த்திவிட்டுப் பெருமையுடன் கூறுங்கள் என்றார். அப்பொழுது வித்வான் வேலனின் ஞாபகம் எனக்கு வந்தது. சேர்ட் கொலரைக் குலுக்கிவிட்டுத்தான் அவர் பேசத் தொடங்குவார். பேசத் தொடங்கிவிட்டால் மன்றில் நிசப்தம் நிலவும். அந்த அளவுக்குக் கேட்போரின் மனதைக் கவரக் கூடிய ஆளுமை பெற்றிருந்தார்.

இளமையில் நாம் அறிந்த வித்வான் வேலன் வேறு; முதுமையில் அவரின் முதிர்ச்சி நிலை வேறு; சிவயோக சுவாமிகள் பற்றி அவர் எழுதிய "ஞான விளக்கு" என்ற நூலில் தன்னைப் பற்றித் தானே விளக்கியுள்ளார். அவரின் இளமைக் காலத்தில் யோகர் சுவாமிகளைப் பல முறை நேரில் கண்டும் தன் கரங்கள் அவர் முன் குவிய மறுத்தனவாம். ஆனால் பல ஆண்டுகள் கடந்த பின், யோக சுவாமியார் சமாதி நிலை அடைந்த பிறகு, அவரின் சமாதியைத் தரிசித்து அழுது அழுது ஆனந்தம் அடைந்தாராம்.

யானே பொய் என் நெஞ்சும் பொய் என்
அன்பும் பொய்

ஆனால் வினையேன் அழுதால் உன்னைப்
பெறலாமே
தேனே அமுதே கரும்பின் தெளிவே
தித்திக்கும்
மானே அருளாய் அடியேன் உனை
வந்துறுமாறே

என்ற ஆனந்தப் பரவசப் பாடல் நினைவிற்கு வருகிறது.

தன் இளமைக் கால அறியாமை பற்றியும் முதிர்வின் பின் தவறை உணர்ந்த தன் நிலையையும் எந்த வித தயக்கமும் இல்லாமல் உள்ளது உள்ளபடியே கூறியிருக்கும் அவரின் அந்த உளப்பாங்கு தான் வித்வான் வேலனை எங்கள் நினைவில் கெட்டியாக நிறுத்தி வைத்துள்ளது. நெஞ்சில் வஞ்சமிலா இனத்தைச் சேர்ந்தவர். அதனால் அவர் போலிகளுடன் பல தடவைகள் பிரச்சினைப் பட்டிருந்தார்.

நாடகத்தால் உன்னடியார் போல் நடித்து நான் நடுவே
வீடகத்தே புகுவான் மிகப்பெரிதும் விழைகின்றேன்.
– என்று

நடிக்கத் தெரியாதவரான மணிவாசகப் பெருமான் கூறியிருந்தது போல் போலிகள் இன்று தம் பக்தியை விலைபேசுகிறார்கள் என்று தமது நூலில் கூறி மனவருத்தப்பட்டுள்ளார்.

இதனாற்றான் போலும் அவருக்குப் பாரதி மேலும் பாரதிதாசன் மேலும் அளவு கடந்த பற்று. அவர்கள் பாடல்களை முணு முணுத்துக் கொண்டிருப்பாராம். முக்கியமாக "துன்பம் நேர்கையில் யாழெடுத்து நீ இன்பம் சேர்க்க மாட்டாயா" என்ற பாடலை பல முறை பாடிக்கேட்டதாக அவரின் சமகாலத்து ஆசிரியை ஒருவர் கூறி நான் கேட்டிருக்கிறேன்.

ஒரு தலைசிறந்த தமிழ் மகனை ஈழத்தாய் இழந்து விட்டாள். அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் தமிழ் வித்வான் பட்டம்பெற்று இலங்கைக்கு வந்து, தான் பிறந்த மண்ணாகிய வடமராட்சிக்குச் செல்லாமல் எங்கள் தென் மேற்கு வலிகாமம்

பகுதியில் குடியிருந்து, மானிப்பாய் இந்துக் கல்லூரி மாணவர்களைச் சிறந்த தமிழறிஞர்கள் ஆக்கிய முத்தமிழ் வித்தகரான அவரின் சேவை அக்கல்லூரி மாணவர்களால் என்றென்றும் நன்றியுடன் நவிலப்படும்.

அவர் இறந்துவிட்டாலும் அவரின் நூல்கள், கட்டுரைகள் அவரின் சிறந்த அறிவையும், ஆற்றலையும், ஆன்மக் கிடக்கைகளையுஞ் சொல்லி நிற்பன.

அவர் வழியில் அஞ்சாது நின்று அருந்தமிழ்ப் பணி ஆற்றுவதே எங்கள் யாவரினதும் கடமையாகும். அவர் ஆன்மா இறைவனில் சங்கமமாகப் பிரார்த்தித்து இவ்விரங்கல் உரையை இத்துடன் முடிக்கிறேன். நன்றி,வணக்கம்

க. வி. விக்கினேஸ்வரன்
உச்ச நீதிமன்ற நீதியரசர்
இலங்கை உச்ச நீதிமன்றம்

நல்லூர் கம்பன் கோட்ட மண்டபத்தில் வித்துவான் வேலன் அவர்களின் நினைவாக
15. 06. 2003 இல் நடைபெற்ற இரங்கல் கூட்டத்தில் ஆற்றிய உரை



# நாநிறைய நெஞ்சம் கலந்து
# நவில்கின்றோம் நன்றி!


எமது குடும்ப தெய்வமான

## வித்துவான் க. ந. வேலன் அவர்கள்

காலத்தோடு கலந்த இறுதி நிகழ்வில்
கலந்து நமக்குற்ற துயரில் பங்கு பற்றி
நமது துக்கத்தைத் தணிக்கப் பல்லாற்றானும்
உதவிய அன்பர்கள், நண்பர்கள் உற்றார்
உறவினர், தமிழன்பர், தமிழ் நிலையத்தினர்,
ஊடகத்தினர் ஆகியவர்களுக்கும்
மிக்க நன்றிகள்.

திருமதி வித்துவான் வேலன் குடும்பத்தினர்





Printed by JR Print Tel: 020 8503 6643 www.jrprint.com